1971 அக்டோபர் 23]

மழை இல்லாவிட்டால் அதன் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அப்போது தெர்மல் பவர் கொடுக்க வேண்டிய நிலேயும் வருகிறது. இதையெல்லாம் மனதில் வைத்து இந்த கமிட்டி பரிசிலனை செய்யும்.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சரவர்கள் பதில் கூறுகிறபோது மின்சாரத்தையே மூலப்பொருளாக பயன்படுத்துகிற தொழிற்சாலேகளுக்கு குறைந்த கட்டணத்தில் கொடுப்பதாக ஒப்பந்தம் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு மிக லாபகரமாக நடக்கிற தனியார் துறை தொழில்களேயே பொதுத்துறைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சோஸலிசம் பேசுகின்ற நேரத்தில் பொதுப்பணத்தை எடுத்து தனியார் லாபமடையக்கூடிய நிலேயை உண்டாக்குகிறோமே, இந்த முரண்பாடுகளே மாற்ற அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதில் ஒன்றும் முரண்பாடு இருப்பதாகத் தெரியவில்லே. இப்படி ஒரு சலுகை அளிக்கப்படாது போனல் தொழிற்சாலேகளே மூடவேண்டியதாக இருக்குமே தவிர, வேறு வழியில்லே. யாரோ தனி நபர் லாபம் சம்பாதிப்பது என்பது இல்லே. லாபத்தில் நமக்கும் பங்கு உண்டு, நமக்கும் அந்த ஸ்தாபனத்தில் உரிமை உண்டு.

காட்டு எருமைகள் வளர்ப்பு

* 44 வின.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டுக் காடுகளில் "காட்டு எருமை"களே வளர்க்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

Joint Directors for State Transport Department

* 45 Q.—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether there is any proposal to appoint regional Joint Directors in the State Transport Department to speed up the efficiency in the administration ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) & (இ) : தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையின் நிர்வாகத்தை சீரமைத்துத் திறன் மிக்கதாய்ச் செய்யும் நோக்குடன், அரசு இம் மாநிலம் முழுவதும் கீழ்காணும் நான்கு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

(1) கன்னியாகுமரி வட்டாரம் : இவ்வட்டாரம் நாகர் கோயிலில் தலைமை யிடத்துடன் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களேக் கொண்டிருக்கும்.